LPB Logopädische Praxis Bülach, Hertiweg 1, 8180 Bülach, Tel. 044 860 41 53, Fax 044 860 41 58, lpb@hlf-fruehbereich.ch
HLF Heilpädagogik und Logopädie im Frühbereich: HFE Heilpädagogische Früherziehung Bülach/Dielsdorf, HFE Heilpädagogische Früherziehung Schaffhausen, LFS Logopädische Frühberatung Schaffhausen, www.hlf-fruehbereich.ch

**பேச்சுப்பயிற்சி நடைமுறை**

**பேச்சுப்பயிற்சி நடைமுறை LPB 2½ வயதிலிருந்து மழலையர்பள்ளி செல்லும்வரையிலான வயதையுடைய சிறுகுழந்தைகளில் காணப்படும் கணிசமான மொழிவளர்ச்சித்தாமதங்கள்,ஆரம்பகால மொழிகையகப்படுத்தலில் இடையூறு மற்றும் பேச்சுக்குறைபாடுகள் போன்றவற்றிற்கான ஆலோசனை மற்றும் சிகிச்சைக்குப் பொறுப்பாக உள்ளது.**

**பேச்சுப்பயிற்சி ஒரு சிறு குழந்தையில் எப்போது வெளிக்காட்டுகிறது?**
-2½ வயதுடைய குழந்தை இன்னும் நிறைய சொற்களைப் பேசாமல் மற்றும் சொல்இணைப்புகளைச் செய்யாதபோது
-குழந்தையின் கேட்கும்திறன் குறைவாக உள்ளதாக நீங்கள் உணரும்போது
-குழந்தையின் புரிதல் குறைவாக உள்ளதாக நீங்கள் உணரும்போது
-குழந்தை குறைவான சொற்களையே தெரிந்துள்ளது என்றால்
-குழந்தை வாக்கியங்களை மாற்றிப்பேசினால்
-குழந்தை திக்கும்போது அல்லது அவசரமாகப் பேசும்போது
-மற்றவர்களோ அல்லது நீங்களோ குழந்தையை குறைவாகப் புரிந்துகொள்ளும்போது

**எங்கள் சலுகை உள்ளடக்குவது எதை?**

**முதல்ஆலோசனை**
உங்களுக்கு உங்கள் குழந்தையின் மொழிவளர்ச்சி சம்பந்தமாகக் கேள்விகள் இருந்தால்,பெற்றோர் எங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.முதல் ஆலோசனையில் துறைசார் சிறப்புத் தெளிவுபடுத்தல் பயனுள்ளதாக இருக்குமா எனப் பெற்றோருடன் விவாதிக்கப்படும்.

**சிகிச்சை**
நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்ட உறவின் அடிப்படையில், ஒன்றிணைந்த விளையாட்டு நடவடிக்கைகளில் மற்றும் தொடர்புப் பரிமாற்றத்தில் குழந்தையின் ஆர்வம் மற்றும் சந்தோஷம் தட்டி எழுப்பப்பட வேண்டும் மற்றும் கற்றல்நடத்தைக்கு உகந்ததாக்கப்பட வேண்டும். தொடக்க சூழ்நிலை சிறுகுழந்தையின் தன்னிச்சையான விளையாட்டுநடவடிக்கைகளை உருவாக்குகிறது அதேபோல் முன்னரே தீர்மானிக்கப்பட்ட மற்றும் சிகிச்சையாளரால் கட்டமைக்கப்பட்ட சூழ்நிலைகளும் உருவாக்குகின்றன.மொழி விருத்தி ஒருபுறம் , மொழிப்பயிற்சியாளரின் மொழி கையகப்படுத்தலுக்கான கோட்பாட்டுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மொழிஉள்ளீடுகளைக் கொண்டுள்ளது.மறுபுறம் குழந்தையின் தன்னிச்சையான வெளிப்பாடுகள் அதே கோட்பாடுகளின் படி மாதிரிகளாக மாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக நீட்டிப்பு, மாறுபாடுகள் மூலம் அல்லது சரியான பின்னூட்டல்கள்

மூலம்.குழந்தைப்பருவ திக்கலுக்கான சிகிச்சை ,பேச்சொலித் தாமதங்கள்/-ஒழுங்கீனத்திற்கான சிகிச்சை ,வாய்மொழி வளர்ச்சியில் சீர்குலைவிற்கான சிகிச்சை,மற்றும் கேட்டல் கோளாறுகளிற்கான  சிகிச்சை ஆகியவற்றுக்கு பிரத்தியேகமான சிகிச்சைமுறைகள் தேவைப்படுகின்றன.
சிறுகுழந்தைகளுடனான சிகிச்சை வெவ்வேறு சக்தி அளவுகளில் நடைபெறும்.

**ஆலோசனை**
ஆலோசனை பெற்றோரை இலக்காகக் கொண்டது.பின்வரும் விடயங்கள் பின்னணியில் உள்ளன.மொழிகற்றல்/பேச்சு குறைபாட்டின் வகை மற்றும் அளவு,சிகிச்சையில் கவனம் செலுத்தல்,வளர்ச்சி முன்னேற்றம்,வளர்ச்சிக்குறைபாடுள்ள குழந்தையுடனான கையாள்கை,அன்றாட குடும்ப வாழக்கையில் குழந்தையின் மொழிவளர்ச்சியை ஆதரித்தல்,விளையாட்டுக் குழுவில் ,முறையே மழலையர்பள்ளியில் சேர்தல்.

அவசியம் என்றால் குழந்தையின் வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுடனும் கூட்டாக கலந்துரையாடல் நடைபெறும்.(குழந்தைமருத்துவர்கள்,பெற்றோர்,மற்றைய சிகிச்சையாளர்கள்,விளையாட்டுக்குழு பொறுப்பாளர்).

**செலவீனங்களை ஏற்பவர் யார்?**
சூரிஹ் மாநிலத்தில் குடியிருப்புடனுள்ள பெற்றோருக்கு பேச்சுப்பயிற்சி சிகிச்சை இலவசமானது.